

திருப்பத்தூரில் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தில், பயனாளிகளுக்கு ஒர்க் ஆர்டரை எம்எல்ஏ நல்லதம்பி வழங்கினார்.

# வீடு கட்டும் பயனாளிகளுக்கு ஒர்க்ஆர்டர் வழங்கினார் எம்எல்ஏ

**திருப்பத்தூர், ஆக. 29–**

கந்திலி யூனியனுக்கு உட்பட்ட கும்மிடிக்காம்பட்டி, நார்சாம்பட்டி, மோட்டூர், நரியனேரி, மானவள்ளி, சின்ன கசிநாயக்கன்பட்டி, வெங்களாபுரம், ப.முத்தம்பட்டி ஆகிய பஞ்.கல், 'கலைஞர் கனவு இல்லம்' திட்ட பயனாளிகளுக்கு, ஒர்க் ஆர்டரை எம்எல்ஏ நல்லதம்பி வழங்கினார். நிகழ்ச்சியில், கந்திலி யூனியன் சேர்மன் திருமதி திருமுருகன், துணை சேர்மன் மோகன் குமார், பிடிஓகள் பிரேம் குமார், ராஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



ஆலங்காயம் டவுன் பஞ்.ல் அதிமுக உறுப்பினர்களுக்கு புதிய அடையாள அட்டையை, முன்னாள் அமைச்சர் வீரமணி வழங்கினார். உடன், எம்எல்ஏ செந்தில்குமார்.

# தொழிலதிபரை கடத்தி ரூ.12 லட்சம் பறித்த வழக்கு தவெக, பாஜ பிரமுகர்கள் உள்ளிட்ட 6 பேர் கைது



அரவிந்தன் சந்தோஷ் ஹரி

அஜித்குமார் வீரமணிகண்டன் விஷ்வா

**திருப்பத்தூர், ஆக. 29–**

திருப்பத்துாரில் தொழிலதிபர் தியாகராஜ் என்பவரை ஒரு கும்பல் கடத்தி பணம் அபகரித்ததாக அவரது தந்தை யுவராஜ் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில், எஸ்பி ஸ்ரேயா குப்தா உத்தரவின்பேரில், கந்திலி இன்ஸ்பெக்டர் சுரேஷ் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக 10 பேரை போலீசார் பிடித்து விசாரணை நடத்தினர். அதில் பல திடுக்கிடும் தகவல் வெளியானது.

இந்த வழக்கில் இப்போது 6 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், இது குறித்து போலீஸ் தரப்பில் கூறியது:

கடத்தப்பட்ட தியாகராஜ் என்பவர், இந்த வழக்கின் முக்கிய குற்றவாளியான அரவிந்தனின் சகோதரியை திருமணம் செய்துள்ளார். அந்தவகையில் இருவரும் மாமன், மச்சான் உறவுமுறை ஆகிறது. இதில் அரவிந்தன், ஜோலார்பேட்டை யூனியன் பொன்னேரி பஞ். துணை தலைவராக பதவி வகிக்கிறார்.

இவர் சமீபகாலமாக ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிகிறது. இவர், தியாகராஜிடம் பணப்புழக்கம் இருப்பதை அறிந்துகொண்டு, அவரை கடத்தி குறுகியகாலத்தில் அதிக பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் தியாகராஜை கடத்த திட்டமிட்டார்.

இந்த கடத்தலுக்கு, தனது ஆதரவாளர்களான கவுதம்பேட்டையைச் சேர்ந்த தினகரன் (எ)ஹரி (23), விஸ்வா (22), வேலன் நகரைச் சேர்ந்த அஜித்குமார் (23), ஆசிரியர் நகரைச் சேர்ந்த தவெக பிரமுகர் சந்தோஷ் (32), சிவராஜ் பேட்டையைச் சேர்ந்த பாஜ பிரமுகர் வீரமணிகண்டன் (32) ஆகியோரை கூட்டு சேர்த்துக்கொண்டார்.

இந்நிலையில், சம்பவத்தன்று தியாகராஜ் டிரைவிங் லைசன்சை புதுப்பிப்பதற்காக வந்திருப்பதை அறிந்துகொண்ட அரவிந்தன், திட்டமிட்டபடி கத்தி முனையில் தியாகராஜை கடத்தினர். அப்போது, தன்னை கடத்தியது அரவிந்தன் என்பதை அறியாத தியாகராஜ், செல்போனில் அவரிடமே தொடர்பு கொண்டு, வீட்டில் இருந்து 12 லட்சம் ரூபாயை எடுத்துவரும்படி கூறியுள்ளார். அதன்படி, அவரும் அங்கு சென்று பணத்தை கொடுத்துள்ளார்.

இந்த 12 லட்சம் ரூபாயில் அரவிந்தன் வீட்டிலிருந்து ரூ.4 லட்சம், பாஜ பிரமுகர் மணிகண்டன் வீட்டிலிருந்து ரூ.4 லட்சம் என மொத்தம் 8 லட்சம் ரூபாயை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் இதுதொடர்பாக 4 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்.

# ஜவ்வாதுமலையில் நாளை கோடைவிழா தொடக்கம்

**போளூர், ஆக.29–**

ஜவ்வாதுமலை 24வது கோடை விழா, பல காரணங்களால் இந்த ஆண்டு நாளை (30ம் தேதி) தொடங்குகிறது. நாளை மறுநாள் (31ம் தேதி) மாலை நிறைவு விழா நடைபெறுகிறது.

கோடை விழாவை முன்னிட்டு, ஜவ்வாதுமலை விழாக்கோலம் பூண்டுள்ளது. சாலைகள் எல்லாம் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு கோடை விழாவில், மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், இலவச மகளிர் பஸ் இயக்கப்படும் என அமைச்சர் அறிவித்துள்ளதால், மலைவாழ் மக்கள் இந்த விழாவை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

ஜம்னாமரத்துார் அருகே உள்ள அத்திப்பட்டு அரசு நிதியுதவி பள்ளியான செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில், நாளை காலை 11 மணிக்கு கோடை விழா நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், துணை சபாநாயகர் பிச்சாண்டி, எம்பிக்கள் அண்ணாதுரை, தரணிவேந்தன், எம்எல்ஏக்கள் கிரி, சரவணன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்கின்றனர். விழா ஏற்பாடுகள், கலெக்டர் பாஸ்கரபாண்டியன் தலைமையில் செய்யப்பட்டுள்ளன.

இதை முன்னிட்டு, நாளை காலை 9 மணிக்கு இசைப்பள்ளி மாணவர்களின் மங்களஇசை நிகழ்ச்சிகள், சுற்றுலாத்துறை சார்பில் மதியம் ஒரு மணிக்கு பரதநாட்டிய நிகழ்ச்சிகள், கலைபண்பாட்டு துறை சார்பில் கிராமிய கலைநிகழ்ச்சிகள், அதைத் தொடர்ந்து ஜவ்வாதுமலையில் உள்ள பல்வேறு பள்ளி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெறுகிறது. நாளை இரவு சுற்றுலாத்துறை சார்பில் சரித்திர புராண நாடகம் நடைபெறும்.

இதேபோல், வரும் 31ம் தேதி நிறைவுநாள் நிகழ்ச்சியை முன்னிட்டு, நாய்கள் கண்காட்சி, கரகாட்டம், மகாபாரத தெருக்கூத்து, பல கிராமிய கலை நிகழ்ச்சிகள் உட்பட ஏராளமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதேபோல், ஏராளமான விளையாட்டு போட்டிகளும் நடைபெற உள்ளன.

# ஆலங்காயத்தில் அதிமுகவினருக்கு புதிய உறுப்பினர் அட்டை வழங்கல்

**வாணியம்பாடி, ஆக. 29–**

ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய அதிமுக சார்பில், நெக்னாமலை, வெள்ளக்குட்டை, நிம்மியம்பட்டு ஆகிய பஞ்.களைச் சேர்ந்த அதிமுக உறுப்பினர்களுக்கு புதிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஒன்றிய செயலாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான சம்பத்குமார் தலைமை வகித்தார். எம்எல்ஏ செந்தில்குமார் முன்னிலை வகித்தார். இதில், முன்னாள் மாஜி அமைச்சர் வீரமணி கலந்துகொண்டு புதிய அடையாள அட்டைகளை வழங்கி பேசினார்.

நிகழ்ச்சியில், ஒன்றிய நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேபோன்று, வாணியம்பாடி நகரம், ஆலங்காயம், உதயேந்திரம் டவுன் பஞ். பகுதிகளில் அதிமுக உறுப்பினர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்கப்பட்டது. இதில், நகர செயலாளர் சதாசிவம், டவுன் பஞ். செயலாளர்கள் சிவக்குமார், சரவணன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# ஆலங்காயம் பகுதியில் தொடரும் விபத்துகள் சாலையோர ஆக்கிரமிப்பு அகற்ற கோரிக்கை

**வாணியம்பாடி, ஆக. 29–**

வாணியம்பாடி – திருப்பத்துார் செல்லும் நெடுஞ்சாலையில் ஆலங்காயம் டவுன் பஞ்.க்கு உட்பட்ட பகுதியில் செல்லும் வாகனங்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்புகள் செய்து வருவதால், போக்குவரத்து நெரிசல் மற்றும் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதால் மக்கள் அவதிப்படுகின்றனர். பங்கூர் அருகில் நெடுஞ்சாலை வளைவு பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால், இரவு நேரங்களில் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது.

இந்நிலையில், நெடுஞ்சாலை ஒட்டியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என டவுன் பஞ். கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், பொதுமக்கள் சார்பில் பலமுறை மனுக்கள் அளித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, நெடுஞ்சாலைத்துறை உயர்அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து விபத்து ஏற்படும் வகையில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டும் என சமூகஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



திருப்பத்துார் அருகே ஏ.கே.மோட்டூர் பஞ்.ல் ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

# இலவச மரக்கன்றுகள் பெற அழைக்குது வனத்துறை

**திருப்பத்துார், ஆக. 29–**

திருப்பத்துார் மாவட்ட வனத்துறை, துாய நெஞ்சக்கல்லுாரி மற்றும் ஏ.கே. மோட்டூர் பஞ். நிர்வாகம் இணைந்து, ஏ.கே மோட்டூர் ஏரிக்கரை உள்ளிட்ட நீர்நிலைகளில் ஆயிரம் மரக்கன்றுகளை நட்டனர்.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட வன அதிகாரி மகேந்திரன் தலைமை வகித்தார். கல்லுாரி துணை முதல்வர் சாம்சன் சண்முகம், உதவி வன பாதுகாவலர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்பத்துார் வனச்சரகர் சோழராஜன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில், வனவர் வெங்கடேசன், பஞ். துணைத்தலைவர் காஞ்சனா சிவபிரகாசம், பஞ். செயலாளர் வசந்தி, சமூகஆர்வலர் ராதாகிருஷ்ணன், முனியப்பன், நளினி, பரிமளா சோலைராஜ், கல்லுாரி மாணவர்கள், பொதுமக்கள், வனத்துறையினர் கலந்துகொண்டனர்.

பஞ். தலைவர் வேலு நன்றி கூறினார்.

மேலும், திருப்பத்துார் வன அலுவலகத்தில் நீர்மருது, நாவல், விழுப்பை, நெல்லி, செம்மரம், வேங்கை, புங்கன், மகிழம் உள்ளிட்ட மரவகைகளின் செடிகள், 30 ஆயிரத்துக்கும் அதிகமாக இருப்பில் உள்ளதால் பொதுமக்கள், விவசாயிகள், தொண்டு நிறுவனங்கள், சமூகஆர்வலர்கள் தங்கள் பகுதியில் செடி நடவு செய்ய விரும்பினால், திருப்பத்துார் வனத்துறையிடம் இலவசமாக செடிகளை பெற்றுக்கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



நாட்றம்பள்ளி அருகே வீட்டுக்குள் பதுங்கிய 6 அடி நீள நாகபாம்பை தீயணைப்பு வீரர்கள் பிடித்தனர். (அடுத்த படம்) ஆலங்காயத்தில் மொபட்டில் பதுங்கிய கட்டுவிரியன் பாம்பு.

# வீட்டுக்குள் புகுந்த 6 அடி நாகம் டூவீலரில் பதுங்கிய கட்டுவிரியன்

**வாணியம்பாடி, ஆக. 29–**

நாட்றம்பள்ளி அடுத்த ஆத்துார்குப்பம் பகுதியில் ஒரு வீட்டில் பாம்பு புகுந்ததாக நாட்றம்பள்ளி தீயணைப்புத் துறையினருக்கு நேற்று காலை தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து, தீயணைப்பு வீரர்கள், வீட்டில் பதுங்கியிருந்த 6 அடி நீள நாகபாம்பை பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இதேபோன்று, ஆலங்காயம் காவலுார் மார்க்கெட் பகுதியில் நிறுத்தியிருந்த மொபட்டில் ஒரு பாம்பு பதுங்கியிருந்தது.

இதுகுறித்து மொபட் உரிமையாளர் விஜய் அளித்த தகவலின்பேரில் விரைந்துவந்த தீயணைப்பு வீரர்கள், மொபட்டில் பதுங்கியிருந்த 4 அடி நீள கட்டுவிரியன் பாம்பை பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

# தொழில் முனைவுத்திறன் வளர்ச்சி கருத்தரங்கம்

**வாணியம்பாடி, ஆக. 29–**

திருப்பத்துார் குறு, சிறு தொழில் முனைவோர் சங்கம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், திருப்பத்துார் தொழில் மையம் மற்றும் வாணியம்பாடி ரோட்டரி கிளப் ஆகியவை இணைந்து, தொழில் முனைவுத்திறன் வளர்ச்சி திட்ட கருத்தரங்கு, ரோட்டரி கிளப் வளாகத்தில் நடத்தின. கிளப் தலைவர் மனோகரன் தலைமை வகித்தார். செயலாளர் சுந்தரராஜன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக துணை பொதுமேலாளர் ரமேஷ், வேலுார் கிளை மேலாளர் கவுரி, திருப்பத்துார் தொழில்மைய பொது மேலாளர் பாஸ்கர் உட்பட பலர் கலந்துகொண்டு, தொழில் முனைவோருக்கு முதலீடுகள் மற்றும் மாணவர்களுக்கான தொழில் முறைகள் பற்றி விளக்கினர்.

இதில், இமயம் கல்லுாரி முதல்வர் கிருஷ்ணகுமாரி, ரோட்டரி மூத்த நிர்வாகிகள் செல்வம், உதயகுமார், கண்ணன் மற்றும் தொழில் முனைவோர்கள், கல்லுாரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



வாணியம்பாடியில் தொழில் முனைவுத்திறன் வளர்ச்சி திட்டம் குறித்த கருத்தரங்கு நடந்தது.

# தொழிலாளி கிணற்றில் பிணமாக மீட்பு

**நாட்றம்பள்ளி, ஆக. 29–**

வெலக்கல்நத்தத்தைச் சேர்ந்தவர் குமார் (42), கூலி தொழிலாளி. கடந்த 21ம் தேதி வெளியே சென்ற இவர் வீடு திரும்பவில்லை. இந்நிலையில், நாட்றம்பள்ளி அருகே முத்தனப்பள்ளியில் சாலையோரம் உள்ள தரைக்கிணற்றில் ஆண் உடல் மிதப்பதாக தகவல் கிடைத்தது. உடனே தீயணைப்பு வீரர்கள் அங்கு வந்து, உடலை மீட்டனர். அதை நாட்றம்பள்ளி போலீசார் கைப்பற்றி விசாரித்ததில், இறந்தவர் குமார் என்பது தெரிந்தது. இது குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.



நாட்றம்பள்ளி மடப்பள்ளம் காலனியில் பழுதடைந்த சாலை.

# குண்டுகுழி சாலை : கிராம மக்கள் அவதி

**நாட்றம்பள்ளி, ஆக. 29–**

நாட்றம்பள்ளி யூனியனுக்கு உட்பட்ட கொண்டகிந்தனப்பள்ளி, மடப்பள்ளம் காலனி பகுதியில் 20க்கும் அதிகமான குடும்பத்தினர் வசிக்கின்றனர். 2012ம் ஆண்டு இந்த பகுதியில் சாலை அமைக்க ஜல்லிக்கற்கள் கொட்டப்பட்டது. ஆனால் சாலை பணி நடைபெறவில்லை. அதிகாரிகளிடம்பலதடவை முறையிட்டும் இதுநாள் வரை சாலை வசதி ஏற்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்போது இந்த சாலை குண்டும்குழியுமாக மாறிவிட்டது. தெருவிளக்கும் இல்லை. இதனால், வாகன ஓட்டிகள் மற்றும் நடந்து செல்லும் மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். இந்த சாலையை அதிகாரிகள் நேரில் ஆய்வுசெய்து, சாலையை சீரமைத்து அப்பகுதியில் தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமு சி2 /416/2024
G.M.கல்பனா, க/பெ. மதியழகன்,
நெ.80/1, சீனிவாச தெரு,
அசநெல்லிக்குப்பம், நெமிலி தாலுகா,
இராணிப்பேட்டை மாவட்டம். ...மனுதார்
-Vs-
வட்டாட்சியர் அவர்கள்
நெமிலி. ...எதிர்மனுதார்

மேற்படி மனுதார் தனது பாட்டி சின்னகுழந்தை என்பவர் மேற்கண்ட முகவரியில் கடந்த 02.05.2012ல் இறந்ததை பதியாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதார் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இதன் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் மாண்பமை அரக்கோணம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

இங்ஙனம்; G.M.கல்பனா,
நெ.80/1, சீனிவாச தெரு,
அசநெல்லிக்குப்பம், நெமிலி தாலுகா
இராணிப்பேட்டை மாவட்டம்.

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், குடியாத்தம், வே.மா.
ந.க.அ3 / 1178 / 2024
கவிதா,
க/பெ.திருமால்,
எண்.17/9, பஜார் வீதி,
பேரணாம்பட்டு நகரம் மற்றும் வட்டம்,
வேலூர் மாவட்டம். ... மனுதார்
—எதிராக—
வட்டாட்சியர் அவர்கள்,
பேரணாம்பட்டு, வே.மா. ... எதிர்மனுதார்

என்னுடைய தாயார் சீதா என்பவர் கடந்த 10-05-2002ம் தேதியன்று இறந்தார். அவ்விறப்பை எதிர்மனுதார் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை. எனவே அவ்விறப்பை பதிவு செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனுவின் மீது எவருக்கேனும் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த விளம்பரம் கண்ட 15 தினங்களுக்குள் மாண்பமை குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனையை எழுத்து மூலமாக தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

கவிதா
17/9, பஜார் வீதி, பேரணாம்பட்டு டவுன்
மற்றும் வட்டம், வேலூர் மாவட்டம்.

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், குடியாத்தம், வே.மா.
ந.க.அ3 / 1178 / 2024
கவிதா,
க/பெ.திருமால்,
எண்.17/9, பஜார் வீதி,
பேரணாம்பட்டு நகரம் மற்றும் வட்டம்,
வேலூர் மாவட்டம். ... மனுதார்
—எதிராக—
வட்டாட்சியர் அவர்கள்,
பேரணாம்பட்டு, வே.மா. ... எதிர்மனுதார்

என்னுடைய தந்தை புழனி என்பவர் கடந்த 04-02-1998ம் தேதியன்று இறந்தார். அவ்விறப்பை எதிர்மனுதார் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை. எனவே அவ்விறப்பை பதிவு செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனுவின் மீது எவருக்கேனும் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த விளம்பரம் கண்ட 15 தினங்களுக்குள் மாண்பமை குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனையை எழுத்து மூலமாக தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

கவிதா
17/9, பஜார் வீதி, பேரணாம்பட்டு டவுன்
மற்றும் வட்டம், வேலூர் மாவட்டம்.

மாண்புமிகு சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை
O.S.132/2023
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
இராணிப்பேட்டை கிளை
By its Branch Manager
–வாதி
Vs
1.A.இனாயதுல்லா
த/பெ.அமானுல்லா ஷரீப்,
94, ஹாஜிபேட், முதல் தெரு,
மேல்விஷாரம், ஆற்காடு தாலுகா,
இராணிப்பேட்டை மாவட்டம்.
2.அப்துல் ரஹமான் த/பெ.அப்துல் ரஷீத்
2/454B, மலைமேடு முஸ்லிம் தெரு,
இரத்தினகிரி,
தென் நந்தியாலம்–632517
–பிரதிவாதிகள்

மேற்படி முதல் பிரதிவாதிகளிடமிருந்து 27–08–2019 அன்று தனிநபர் கடனாக ரூ.3,00,000/– (மூன்று லட்சம்) பெற்றுக்கொண்டு, 2ம் பிரதிவாதி காரண்டாராக இருவரும் கையெழுத்திட்டுள்ளனர். வாதியானவர் பிரதிவாதிகள் மீது மேற்கண்ட நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை தொடுத்துள்ளார். வழக்கு 26–9–2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் 26–09–2024 அன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ பிரதிவாதிகளாகிய நீர் இருவரும் ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி தாவா ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

NAZRIN BEGUM, B.A.,L.L.B.,
ADVOCATE, RANIPET.



திருப்பத்தூர் அருகே ஏ.கே.மோட்டூர் பஞ்.ல் ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

# இலவச மரக்கன்றுகள் பெற அழைக்குது வனத்துறை

**திருப்பத்தூர், ஆக. 29–**

திருப்பத்தூர் மாவட்ட வனத்துறை, துாய நெஞ்சக்கல்லூரி மற்றும் ஏ.கே. மோட்டூர் பஞ். நிர்வாகம் இணைந்து, ஏ.கே மோட்டூர் ஏரிக்கரை உள்ளிட்ட நீர்நிலைகளில் ஆயிரம் மரக்கன்றுகளை நட்டனர்.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட வன அதிகாரி மகேந்திரன் தலைமை வகித்தார். கல்லூரி துணை முதல்வர் சாம்சன் சண்முகம், உதவி வன பாதுகாவலர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்பத்துார் வனச்சரகர் சோழராஜன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில், வனவர் வெங்கடேசன், பஞ். துணைத்தலைவர் காஞ்சனா சிவபிரகாசம், பஞ். செயலாளர் வசந்தி, சமூகஆர்வலர் ராதாகிருஷ்ணன், முனியப்பன், நளினி, பரிமளா சோலைராஜ், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், வனத்துறையினர் கலந்துகொண்டனர்.

பஞ். தலைவர் வேலு நன்றி கூறினார்.

மேலும், திருப்பத்துார் வன அலுவலகத்தில் நீர்மருது, நாவல், விழுப்பை, நெல்லி, செம்மரம், வேங்கை, புங்கன், மகிழம் உள்ளிட்ட மரவகைகளின் செடிகள், 30 ஆயிரத்துக்கும் அதிகமாக இருப்பில் உள்ளதால் பொதுமக்கள், விவசாயிகள், தொண்டு நிறுவனங்கள், சமூகஆர்வலர்கள் தங்கள் பகுதியில் செடி நடவு செய்ய விரும்பினால், திருப்பத்துார் வனத்துறையிடம் இலவசமாக செடிகளை பெற்றுக்கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.